அண்ணாமலையாருக்குத் "துளசி சமர்ப்பயாமி!"

Phone No 4502 | Regd. No. M. 5458
விலை அரை அணா | இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. | MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (29—5—50) | வெளியீடு (30—5—50) [இதழ் 264

ஆச்சாரியார் அளித்த மணிவிழாப் பரிசு

—(0)—

துளசியின் மகத்துவம் பற்றியும் விளக்கம் தருகிறார்

துளசிதாசர்கள் உற்பத்தி செய்யப்படும் அலங்கோலம்

"எனது அன்புக் காணிக்கையாக இந்த 'துளசி'யை அண்ணாமலை பிள்ளை அவர்களுக்கு அனுப்பியுள்ளேன். இந்த துளசிக்கு ஈடான பரிசு எதுவும் இருக்க முடியாது. எவ்வளவு பணத்தைப் பரிசாக வழங்கினாலும் இந்த துளசியின் மகத்துவத்துக்கு ஒப்பாகாது"

இது இவ்விந்திய உபகண்டத்தின் முன்னாள் கவர்னர் ஜனரல் தோழர் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள், தோழர் அண்ணாமலைப் பிள்ளை அவர்களுக்கு அனுப்பியுள்ள செய்தி—அல்ல அன்பளிப்பு!

கடந்த சனிக்கிழமையன்று, தோழர் என். அண்ணாமலைப் பிள்ளை அவர்களின் மணிவிழா நடைபெற்றது. அவ்வமயம் அவரது நண்பர்கள் பல பலவித அன்பளிப்புகளை வழங்கினர். தோழர் ஆச்சாரியாரும் தனது அன்பை 'துளசி' வடிவிலே அனுப்பி அத்துடன் துளசியின் மகத்துவத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விழாவுக்கு தோழர் காமராஜநாடார் தலைமை தாங்கியுள்ளார். அவரது தலைமை உரையிலே தோழர் அண்ணாமலைப்பிள்ளை 30 ஆண்டுகள் காங்கிரசுக்கு ஆற்றிய தொண்டினைப்பற்றி புகழ்ந்து பேசியிருக்கிறார்.

இங்ஙனம் 30 ஆண்டுகள் அரசியல் தொண்டாற்றிய அண்ணாமலையாருக்குத்தான் தோழர் ஆச்சாரியார் துளசியைப் பரிசாக வழங்கியுள்ளார்! தொண்டுக்குப் பரிசு துளசி!

இதனைத் துளசியின் மகத்துவம் என்றும், ஆச்சாரியாரின் அறிவுத்திறன் அல்லது அன்பு பெருக்கம் என்றும் உடலர் பலவாறு நினைக்கக்கூடும்.

ஆனால் ஆச்சாரியார் அனுப்பிய துளசிப் பரிசை இங்ஙனம் அண்ணாமலைகளும் அவரது நண்பர்களும் சிறந்ததோர் பரிசென கருதி களிப்பெய்திய அதே நேரத்தில், அப்பரிசினை அனுப்பிய ஆச்சாரியாரின் உள்ளத்தில் நையாண்டி கலந்த புன்னகை தவழ்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆச்சாரியார் சாதாரண மனிதரல்ல; அரசியல் அறிஞர்; அனுபவசாலி; வெளிப்படையாக மூடபழக்க வழக்கங்களைக் கண்டிக்கும் துணிவு பெறாதவராயினும் பகுத்தறிவின் பக்குவம் தெரிந்தவர், பகுத்தறிவு இயக்கம் பரவி வரும் நாட்டிலே பிறந்து வளர்ந்து, பகுத்தறிவுப் பிரசார ஒலி கேட்டுக் கேட்டு அது காரணமாகவே கோளாக் காதராக ஆனவர்! இருபதாம் நூற்றாண்டில் வாழ்பவர்.

இப்படிப்பட்டவர் 30 ஆண்டு அரசியல் தொண்டு புரிந்த ஒருவருக்கு தனது உற்ற நண்பருக்கு துளசியைப் பரிசாகத் தருகிறாரென்றால் இதன் பொருள் என்ன?

நாட்டிலே நல்லறிவுப் பிரசாரம் பரவிவரும் வேளையில் பகுத்தறிவுப் பாசறைகள் பல அமைக்கப்பட்டு பகுத்தறிவு வீரர்படை திரட்டப்பட்டு வரும்போது ஒரு தமிழருக்கு ஆச்சாரியார் துளசியினை பரிசாகத்தருகிறார் என்றால், இதில் குறும்புதனம் அல்லாது குறிக்கோள் வேறென்ன இருக்க முடியும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

இங்ஙனம் ஒரு அரசியல் தலைவருக்கு துளசியைப் பரிசளிப்பதன் மூலம் நாட்டிலே "துளசிதாசர்"களை உற்பத்தி செய்யப் பார்க்கிறார் போலும்

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

'எகிப்து தூதுவராலயத்தை கைப்பற்றுவோம்'

யூதர்கள் மிரட்டல்

கெய்ரோ, மே 28—

ஜெருசலத்திலுள்ள எகிப்து கான்ஸலேட் கட்டடத்தை கைப்பற்றுவதாக யூதர்கள் மிரட்டி வருகின்றனர் என்ற செய்தியை அம்மானிலுள்ள எகிப்து கான்ஸல் அதிகாரிகள் எகிப்து அயல்நாட்டிலாகாவுக்கு தெரிவித்திருப்பதாக 'குளோப்' நிருபர் அறிவிக்கிறார்.

வயர்லெஸ் ஆபரேடர்கள் பரீட்சை

ரேடியோ-தந்தி, ரேடியோ டெலிபோன் ஆபரேடர்கள் தகுதி பத்திரம் வழங்குவதற்கான அடுத்த காலாண்டுப் பரீட்சை, கல்கத்தாவில் 136, போவஜார் தெருவிலுள்ள ஜார்ஜ் தந்திப் பயிற்சி ஸ்தாபனத்தில், 1950 ஜூலை 24-ந் தேதி ஆரம்பமாகும்.

வறுமையின் கொடுமை! பஞ்சத்தின் கோரம்!

உணவு இல்லாக் காரணத்தால் பிள்ளைகளை விற்கின்றனர்!

ஜப்பானில் விபரீத நிலைமை

டோகியோ, மே. 28—

ஜப்பானிலுள்ள விவசாய குடும்பத்தினர் பஞ்சக் கொடுமை தாங்காது தங்கள் குழந்தைகளை விற்றுவிடுவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

சென்ற வருஷம் 289 நிகழ்ச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இவ்வருஷம் இம்மாதிரி 5 நிகழ்ச்சிகள் நடைபெற்றிருப்பதாகவும் சர்க்கார் கண்டுபிடித்திருப்பதாக இந்த செய்தியை வெளியிட்ட 'மைனிசி' என்ற டோகியோ பத்திரிகை கூறுகிறது.

வாங்கப்படும் பெண்கள் ஹோட்டல்களிலும் கிளப்புகளிலும் பணிப்பெண்களாக அமர்த்தப்படுகிறார்களாம்.

மீண்டும் ஸிரியா-துருக்கி ரயில் போக்குவரத்து

டாமஸ்கஸ், மே 28—

ஸிரியாவுக்கும் துருக்கிக்குமிடையே ரயில் போக்குவரத்து மீண்டும் ஆரம்பமாகியிருக்கிறது.

துருக்கியில் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது இந்த ரயில் தொடர்பு துண்டிக்கப்பட்டது என்பது விளக்கமாம்.

கணக்குக் கூட்டிச் சொல்லும் இயந்திர 'மனிதன்'

கொலம்பிய பல்கலைக்கழகத்தின் அரிய கண்டுபிடிப்பு

கணக்குக் கூட்டிச் சொல்லும் இயந்திர 'மனிதன்' ஒருவன் கொலம்பியா சர்வகலாசாலையினரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறான். 0, 12, 3 என்கிற நான்கு வரிசையில் இந்த இயந்திரத்தில் எண்கள் பதிகின்றன. 16 உண்மைகளை ஒரே சமயத்தில் இந்த இயந்திரம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுமாம், 24 வோல்ட் மின்சார சக்தியில் இது வேலை செய்வதால் இதனுக்கு ஆபத்து எதுவும் இல்லையாம்.

இதைச் செய்து முடிக்க 5 மாத காலமும், 540 டாலர் செலவும் பிடித்ததாம்.

ஜெர்மனி பொதுத் தேர்தல்

———(0)———

மூவல்லரசுகள் வலையில் ரஷியா சிக்காது

பெர்லின், மே 28—

அகில ஜெர்மனிக்கும் ஜனநாயக முறையில் பொதுத் தேர்தல் நடத்த மூவல்லரசுகள் உத்தேசித்துள்ள திட்டத்திற்கு ரஷ்யா இணங்குவது சந்தேகமே எனத் தெரிகிறது.

பாதி ஜெர்மனியுடன் சமாதான உடன்படிக்கையை செய்துகொள்ள மேற்கு வல்லரசுகள் தயாராக இல்லையாம்.

ஞாபகச் சின்னமா? அது முட்டாள்தனமல்லவா?

———(0)———

பேரறிஞர் பெர்னார்ட்ஷாவின் அறிவுரை

காந்தியாருக்குச் சிலை நாட்டுபவர்கள் கவனிக்கட்டும்!

லண்டன், மே 28—

பெர்னார்ட்ஷா பிறந்து வளர்ந்த இடத்தை வாங்கி அதை ஒரு ஞாபகச் சின்னமாக அமைக்கவேண்டும் என்ற யோசனையை பெர்னார்ட்ஷா முட்டாள்தனமானது என்கிறார். தான் பிறந்த இடத்தில் கல்வெட்டு வேண்டுமானால் ஒன்றை வைத்துக்கொள்ளலாமே என்று அவர் கேலியாகக் கூறுகிறார்.

தன்னிகர்க்காக ஆலர்பெய்ஜான் கலைநகரான டெப்ரீஸில் ஒரு கிணறு வெட்டும்போது அதில் எண்ணெய் கிடைத்ததாம். இங்குக் காணப்பட்ட முதல் எண்ணெய் கிணறு இதுதானும்.

பெர்லின்-மே. ஜெர்மனி விமான போக்குவரத்து

பெர்லின், மே 28—

முன்பு ரஷ்யர்கள் முற்றுகையைத் தகர்க்க பெர்லினுக்கு விமான மூலம் சப்ளைகள் அனுப்பப்பட்டது போல், மீண்டும் அத்தகைய நிலைமை ஏற்படும் போல் தெரிகிறது. தரை மார்க்க போக்குவரத்துகளில் ரஷ்யர்கள் அனுபவிக்க காலதாமதம் ஏற்படுவதால் பெர்லினுக்கும் மேற்கு ஜெர்மனிக்கும் இந்த விமான போக்குவரத்து ஏற்பாடு செய்யப்படும் என்றும், இந்த விமான போக்குவரத்து செலவுகளை ஜெர்மானியர் ஏற்பர் என்றும் சொல்லப்படுகிறது.

பஞ்சாப் அவசரச்சட்டம்

காங்கிரஸ் பரிசீலிக்குமாம்

புதுடில்லி, மே 28—

பஞ்சாப் ராஜ்யத்திலிருந்து கிலத்தில் பரவும் குடிகளை அப்புறப்படுத்துவதுபற்றிய ஸ்தல சர்க்கார் பிறப்பித்துள்ள அவசரச்சட்டத்தை காங்கிரஸ் பார்லிமெண்டரிபோர்டு பரிசிலனை செய்யும்.

எந்த நோக்கத்துடன் இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்று புகார்கள் அ. இ. கா. கமிட்டிக்கு ஏகமாக வந்திருக்கின்றனவாம்.

பஞ்சாப் மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைவர் பொனிகுர்முக்சிங் அ.இ.கா.க. பார்லிமெண்ட்போர்டு இலாகாவைச் சேர்ந்த தோழர் சக்ரவர்த்தியை சந்தித்துப் பேசியிருக்கிறார்.

பஞ்சாபுக்கே நேரில் சென்று நிலைமையை அறியவும், சர்தார் தோழர் கோபிசந்த் பார்கவாவை சந்திக்கவும் தோழர் சக்ரவர்த்தி பஞ்சாப் செல்லவிருக்கிறார்.

மாலை மணி

சென்னை 29—5—50 திங்கட்கிழமை

நாராயணசாமிகள் - நாடெங்கும்!

"பெற்று வளர்த்த அன்னையே! பேரன்புகெழுமிய தந்தையே! நான் போகிறேன்!

"உங்கள் அன்பு ஒப்பற்றது; உங்கள் தோழமை இணை கூற முடியாதது; உங்களால் நான் பெற்ற இன்பம் சொல்லின் திறத்தால் படம் பிடித்தற்கரியது. என்றாலும் நான் போகிறேன்.

"நான் போய்விட்டேன் என்பது தெரிந்ததும் நீங்கள் கதறுவீர்கள்; கூவிக்கூவி அழுவீர்கள்; அந்தோ மகனே என்று புலம்புவீர்கள்; ஆருத் துயரம் அடைவீர்கள்; ஒரே சமயத்தில் ஓராயிரம் தேளால் கொட்டப்பட்டது போன்ற வேதனையும் துயரமும் ஒருங்கே அடைவீர்கள். இவ்வளவும் தெரியும் எனக்கு! தெரிந்தும் தான் நான் போகிறேன்!

"போகிறேன் நான். போனவர் திரும்பி வரமுடியாத இடத்திற்குப் போகிறேன். கண்டவர் விண்டிலர்—விண்டவர் கண்டிலர் என்று சொல்லப்படும் இடத்திற்குப் போகிறேன். ஆம்! மயானபுரி வழியாக மரணபுரிக்குப் போகிறேன்.

"எழிலும் சுவையும் ததும்பும் இளமைப் பருவம்தான் எனக்கிருப்பது. வயது 23 தான். உலக வாழ்க்கையின் இன்பத் தென்றலை நுகர வேண்டிய நேரம்தான். என்றாலும் போகிறேன்.

"என் மனம் வருந்தத்தான் செய்கிறது உலகைவிட்டுப் பிரிவதற்கு! உங்களைவிட்டுப் பிரிவதற்கு! என் நண்பர்கள் அனைவரையும் விட்டுப் பிரிவதற்கு! என்றாலும் பிரிகிறேன். உடைந்த உள்ளத்தோடு, இரத்தக் கண்ணீர் வடிக்கும் உள்ளத்தோடு, வறுமை ஈட்டியால் குத்திக் குடையப்பட்ட உள்ளத்தோடு நான் பிரிகிறேன்.

"ஏன் போகிறாய் என்று கேட்கமாட்டீர்கள்—ஏன் போகிறேன் என்பது உங்கட்கே தெரியும்-நாம் மூவரும் தினம் தினம் கூடிக் கலந்து பேசிப் பேசிக் கண்ணீர் சிந்திய செய்திதானே அது!

"வேலையில்லாத் திண்டாட்டம்! ஆம்; அதுதான் காரணம் நான் இந்த இளமை ததும்பும் வயதில், இந்த உலகைவிட்டுப் பிரிவதற்கு!

"உங்கட்குத் தெரிந்து சில இடங்கள்—தெரியாமல் பல இடங்கள்—காலையிலும் மாலையிலும்—இரவிலும் பகலிலும்-சென்னையிலும் வெளியூர்களிலும்-வேலை எங்கேனும் கிடைக்குமா என்று தேடித் தேடிப் பார்த்தேன்—கிடைக்கவில்லை!

"சிலரிடம் கெஞ்சிக் கேட்டேன் — சிலரிடம் பணிந்து கேட்டேன்—சிலரிடம், அவர்கள் எனக்கு அறிமுகமானவர்கள், வாதாடியும் கேட்டேன்—வேறு சிலரிடம் அவர்கள் என் தோழர்கள், எனக்கொரு வேலை தராவிட்டால் நான் இந்த உலகை விட்டே பிரிந்து விடுவேன் என்று மிரட்டியும் கேட்டேன்—என்ன செய்து என்ன? வேலை! அந்த இரண்டெழுத்துச் சொல் என்னிடம் நெருங்கவே மறுத்துவிட்டது! எட்ட எட்ட, எட்டாது செல்லும் அடிவானமாகவே இருந்துவிட்டது, "வேலை".

"இரண்டோர் சமயம், வேலை, எனக்குக் கிட்டிவிட்டதுபோலவே தெரிந்தது ஆனால், இரண்டோர் நாட்களுக்கெல்லாம், அந்தக் காட்சி வெறும் கானல் நீராகவே முடிந்துவிட்டது, ஏற்கனவே துக்கத்தாலும் ஏக்கத்தாலும் பிளந்து கிடந்த என் உள்ளம் இந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னர், தூள் தூளாக உடைந்து சிதறி நாலு பக்கமும் தெறித்தோடிவிட்டது.

"உடைந்த உள்ளத்தோடும் வாழலாம் — வாழ்கிறார்கள் சிலர்—'சிலர்' என்ன? பலர்! ஆனால் அதுபோல 'வாழ' எனக்கு விருப்பமில்லை! வாழ்வா அது? நடமாடும் சாவு! அந்தச் சாவு நிலையிலே 'வாழ' எனக்கு விருப்பமில்லை! எனவேதான் போகிறேன்!

"வயதான உங்களுடைய முதுகை வளைக்கும் பாரமாக, உங்கள் உழைப்பை உறுஞ்சும் உலுத்தனாக, உங்கள் குருதியைக் குடித்து வாழும் குடிலனாக, நீங்கள் அரும்பாடுபட்டுத் தேடிவரும் சிறு தொகையைக் கரைத்துத் தின்னும் கரையானாக இருக்க என் மனம் இசையவில்லை! எப்படி இசையும்? எனக்கு இருதயம் இருக்கிறதே! அந்த இருதயத்திற்குச் சிந்திக்கும் பண்பு இருக்கிறதே! அந்தச் சித்தனை, "உழைக்காமல் வாழாதே உலுத்தனாக!" என்று எனக்கு ஓயாமல் அறிவுரை கூறியபடி இருக்கிறதே! இந்த நிலையில் நான்—நான் மட்டுமா? மனிதப் பண்பு படைத்த எந்த உருவம் தான்—எப்படி வாழமுடியும்?

"இந்தக் கடிதத்தைப் படிக்கும்போது உங்கள் கண்கள் பொழியும் கண்ணீரால் இந்த எழுத்துக்கள் கலைந்து அழியும் காட்சிதோ என் கண் முன்னால் தெரிகிறது. உங்கள் வாடிய முகம், குழிவிழுந்த கன்னம், குளமான கண்கள், அந்தக் கண்களிலிருந்து வெளியேறும் நீர் அருவி. அந்த அருவியால் நனையும் உள்ளம்—இவ்வளவு காட்சிகளும் இந்தக் கடிதத்தை எழுதத் தொடங்கியது முதல் என் உள்ளத்தைக் குலுக்குகின்றன. எனவே எனக்கு எழுதக் கையோடவில்லை. எழுத்துக்களைத் தீட்ட இந்த உடைந்துபோன பென்சிலுக்கும் 'மனம்' வரவில்லை. எனவே இந்தக் கடிதம் இந்த அளவோடு நிற்கிறது.

"அழாதீர்கள் பெற்றோர்களே! அழாதீர்கள்! கண்ணீர் வடித்துக் கதறாதீர்கள்! கவலையின் உருவங்களாக உலவாதீர்கள்! சோகபிம்பங்களாக நடமாடாதீர்கள்! பிறந்தவர் இறப்பது இயற்கை! எனவே நான் இறந்ததும் இயற்கை என்றே கருதி, கண்களைத் துடைத்துக் கொண்டு களிப்புடன் வாழுங்கள் குடும்பத்திலிருந்து நான் ஒருவன் குறைவதால், உங்கள் வாழ்க்கையைஅழுத்தி வந்த பாரம் கொஞ்சம் குறையும். வளைந்து கிடக்கும் உங்கள் முதுகுகள் சற்று நிமிரும்.

"நான் போக வேண்டிய நேரம் வந்துவிட்டது என்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற, அருமை அன்னையே! 'அப்பா நாராயணசாமி' என்று அழைத்து அழைத்து, அப்படி அழைப்பதிலே ஓர் இன்பம் கண்டுவந்த என் ஆசைத் தந்தையே! என்னைப் புறக்கணித்து ஒதுக்கிய உலகமே! சமுதாய மக்களே! சர்க்காரே! விடைகொடுங்கள்! மரணம் என்னை அழைக்கிறது! நான் போயாக வேண்டும்! இனி நான் இந்த உலகத்தில்இருக்க முடியாது—இருக்கவும் வழியில்லை.

இப்படிக்கு,
நாராயணசாமி

* * *

இதே சொற்கள் அல்ல-ஆனால் கிட்டத்தட்ட இவைபோன்ற சொற்களைக்கொண்ட ஓர் கடிதம் -அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்துக் கண்ணீர் சிந்திய வண்ணம் கோவெனக் கதறிக் கிடக்கும் பெற்றோர் - அவர்கள் பக்கத்தே ஓர் பிணம்-இப்படி ஒரு காட்சி சென்னை 'மெயில்' ஏட்டிலே இரண்டு நாட்களுக்கு முன் தரப்பட்டிருக்கிறது, படமாக அல்ல-செய்தியாக!

நாராயணசாமி, 23 வயது படைத்த ஓர் இளைஞன்! கட்டிளங்காளை! வாழ்க்கையின் 'ருசி'யை உணரவேண்டிய பருவத்தினன்! ஆனால் அவனுக்கு வேலை ஏதும் கிடைக்கவில்லை இந்தப் பரந்த உலகத்தில்-எனவே தற்கொலை புரிந்துகொண்டான்-உலகைவிட்டுப் பிரிந்துவிட்டான். பிரியும்போது தன் விபரீதச் செயலை விளக்கிக் கடிதம் ஒன்று தீட்டி வைத்துவிட்டு மறைந்துபோனான். சம்பவம் நிகழ்ந்த இடம் பெரம்பூர்-சென்னையின் மேற்குப் பகுதி! நாராயணசாமி உலகத்தைத் துறந்த நாள், மே 25-வியாழக்கிழமை! செய்தி வெளிவந்திருப்பது மெயில் ஏடு, மே 27 இதழ், 4-ம் பக்கம்!

உள்ளம் உருக்கும் இந்தப் பரிதாபச் சரித்திரத்தைப் பத்திரிகைகளிலே பார்க்கும்போது இரக்க உணர்வு படைத்த எவர் கண்களும் நீர்பொழியும் குளமேகங்களாக மாறத்தான் செய்யும். ஆனால் அப்படிச் சிந்தப்படும் கண்ணீர், இந்தக் கண்ணீர் சிந்துபவர்களின் பரிதாப உணர்ச்சியைத்தான் காட்டுமே தவிர, அந்தக் கண்ணீரால் அடிக்கடி பல நாராயணசாமிகள் வாழ வழியற்ற காரணத்தால் வாழ்க்கையைத் துண்டித்துக்கொண்டுஉலகத்தைவிட்டே மறைந்துவிடும் துக்ககரமான நிகழ்ச்சிகளை ஒருபோதும் தடுத்துவிட முடியாது.

ஒரு சிலர் செய்யும் தருமம் இருக்கிறதே, அதுவும் இப்படித்தான், தருமம் செய்பவர்களின் தயாள சிந்தையைக் காட்டும் மூன்று கலர் விளம்பர நோட்டீசாகத் திகழுமே தவிர நெஞ்சு நைந்து மாளும் நாராயணர்களுக்கு வாழ்வு அளிக்கப் பயன்படாது.

உண்மையிலேயே நம் சமுதாயத்தில், இத்தகு கொடுமைகள் நிகழாமல் இருக்கவேண்டுமானால், நாட்டிலே உள்ள எல்லா மக்களுக்கும் வேலை தேடித் தரும் சிறந்த கடமையை நம் ஆளவந்தார்கள் மேற்கொண்டாக வேண்டும். அந்தக் கடமையை நிறைவேற்றுவது எளிதல்ல—நமக்குத் தெரியும்! அதனை நிறைவேற்றுவது என்று தொடங்கினால் ஆயிரம் ஈட்டி முனைகள் ஆட்சியாளரை வீழ்த்தக் கிளம்பும் முதலாளித்துவ முகாமிலிருந்து—அதுவும் நமக்குத் தெரியும். பிர்லாக்களின் புன்னகை, டாடாக்களின் சைலாகு, வால்சந்துகளின் அரவணைப்பு, டால்மியாக்களின்வெள்ளித்தோட்டாக்கள், அழகப்பாக்களின் அருள்நோக்கு, வடபாதிமங்கலங்களின் பணப்பெட்டிகள் இவ்வளவையும் இழந்தாகவேண்டும் காங்கிரஸ்-இவ்வளவையும் இழப்பது என்றால் எளிதிலே மனம் வராது பாரதபுத்திரர்களுக்கு—ஆம்! அதனையும் அறிவோம்நாம். அதற்குமேலும் அறிவோம்!

அறிந்தும்தான் கூறுகிறோம், அனைவர்க்கும்வாழ வழி தேடித் தரும் பொறுப்பை மேற்கொள்ளுங்கள் ஆளவந்தார்களே என்று!

ஏனெனில், ஆளவந்தார்கள், அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கும் காரணத்தால் அடியோடு மறந்திருக்கும் மிக முக்கியமானதோர் உண்மையை நாம் மறக்கவில்லை ஆயிரம் பிர்லாக்களின் புன்னகையை விட ஒரு நாராயணசாமியின்—ஒரு பாட்டாளித் தோழனின்—உயிர், உழைப்பு, உழைப்பைத் தரும் வாழ்க்கை ஆகிய இவை எத்தனையோ மடங்கு மேலானவை என்பதே அந்தச் சிறந்த உண்மை.

நாடு, வாழ இடம்தராக் காரணத்தால், நாராயணசாமிகள் பலர், நித்த நித்தம் மரணப் பள்ளத்தில் குதித்து, தங்கள் வாழ்க்கையைக் கத்தரித்துக் கொண்டிருக்கும்போது, ஆட்சியாளர்கள், டாடாக்களுடனும் பிர்லாக்களுடனும் கை குலுக்கிக் கொண்டிருப்பது அறமன்று—அநீதி! நேர்மையன்று—நஞ்சனைய செயல்! காந்தியப் பண்பு அன்று—நாசடர்தம் பாதை!

எனவேதான் நாம் கூறுகிறோம், மீண்டும் கூறுகிறோம், மீண்டும் மீண்டும கூறுகிறோம், இப்படிக் கூறுவதால் ஆட்சியாளர்தம் அடக்குமுறை பாணம் நம் மீது தொடுக்கப்படலாம் என்பது நன்றாகத் தெரிந்திருந்தும் கூறுகிறோம், ஆட்சியாளர்களே — அனைவருக்கும் வேலை தேடிக் கொடுங்கள் என்று!

'பொதுவுடமைத்தோழர்களை வேட்டையாடத்தான் எங்கட்குத் தெரியும்-அனைவர்க்கும் வேலை தர எங்களால் எப்படி முடியும்?" என்று எளிதான முறையில் பதிலளித்துவிடக்கூடும் கனம் பொருந்திய காங்கிரஸ் கண்ணியவான்களின் சர்க்கார்!

அப்படிப் பதிலளிப்பதானால் அந்தப் பதில் மொழிக்கு ஒரு பதில் மொழியை இப்பொழுதே கூறிவிட ஆசைப்படுகிறோம் :—

"ஆட்சியாளர்களே! அருமை நண்பர்களே! நாட்டிற்கு விடுதலையைத் தேடித்தந்த நல்லோரே! நாராயணசாமிகள் நாடெங்கும் இருக்கிறார்கள்! ஒருவர் இருவரல்ல, ஆயிரம் ஆயிரம் பேர் இருக்கிறார்கள்! செத்த வாழ்வு வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்! சுகம் தேடித் தருவதாகக் கூறி ஓட்டுப்பெற்று ஊராளும் உத்தமர்களாக மாறிய பின் அந்த வாக்குறுதியை மறந்துபோன உங்களைச் சபித்தபடி இருக்கிறார்கள். அந்த சாபம் சாபமாகவே இருந்துவிடாது. ஒரு நாளைக்கு கோபமாக மாறும். மாறினால் புரட்சி நாடெங்கும் மூளும்! வேண்டாம், வேண்டாம் அந்த நிலை! அந்தப்பாழும் நிலையை உருவாக்கிய புண்ணியவான்கள் என்ற பெயரை வரலாற்றில் பொறித்துக் கொள்ளவேண்டாம் நீங்கள்! வெள்ளம் வரும் முன்னே அணைக்கட்டை அமையுங்கள். புரட்சி எழுமுன்னே புதுவாழ்வை அளியுங்கள் பாமரர்களுக்கு!"

* * *

தற்கொலை செய்து கொண்டு மாண்டுபோன நாராயணசாமியின் பிணம் மட்டும் வாய்திறந்து பேச முன்வந்தால் அதுஇப்படித் தான் பேசும்! ஆம்! நிச்சயம்!

மேற்கிந்திய தீவில் சதித் திட்டம்

ஒரு பெண் கைதானாள்

நியூயார்க், மே 28—

மேற்கிந்திய தீவுகளில் ஒன்றான டொமினிகா தீவில் புரட்சி ஏற்படுத்த சதி செய்த கூட்டத்தைச் சேர்ந்த 25 வயதுள்ள ஒரு பெண் நியூயார்க்கில் கைதுசெய்யப்பட்டிருக்கிறாள். அவளுடன் மற்றும் நான்குபேர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். மியாமியிலும் க்யூபாவிலும் இவர்களைச் சேர்ந்த மற்ற மூவர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இச் சதித்திட்டத்திற்குப் பணம் தேடுவதற்காக கள்ள யு.எஸ். டாலர்களை தயாரித்து இவர்கள் வைத்திருந்ததாகவும் தெரிகிறது. இவர்கள் அமெரிக்க கள்ள நோட்டு தயாரிக்கும் குழுவினரிடமிருந்து இவைகளைப் பெற்றதாகத்தெரியவருகிறது. கள்ள நோட்டுகளை க்யூபன் இரகசிய போலீசார் பறிமுதல்செய்துவிட்டனர். —குளோப்

அமெரிக்காவில் திருமணக் கழகம்

சகல ஏற்பாடுகளையும் அவர்களே செய்கின்றனர்!

நியூயார்க், மே 27—

350 டாலர் கொடுத்து விட்டால் போதும், திருமண அழைப்பு முதல் புது மண தம்பதிகளின் உல்லாச யாத்திரைவரை சகலமான விஷயங்களையும் கவனித்து நடத்த அமெரிக்காவில் ஒரு தனி ஏஜென்ஸி இருந்து வருகிறது. 50 விருந்தினர்களுக்கான ஏற்பாடு மட்டும்தான் இந்த 350 டாலரில் செய்யப்படுமாம்.

எந்த விதமான கார்டில் அழைப்பு அச்சிடுவது என்பது முதல் ஒவ்வொரு ஏற்பாடும் எப்படியிருக்கவேண்டும் என்பதைக் கேட்டறிந்து இந்த ஏஜென்ஸியினர் சகல ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்களாம்.

திருமண தினத்தன்று மணப் பெண்ணையும் அவளுடைய தோழிகளையும் அலங்கரித்து சிங்காரிக்க அழகுக் கலை நிபுணர்கள் அனுப்பப் படுவார்களாம், திருமணக் காட்சி போட்டோவும் எடுக்கப்பட்டு மண மக்களுக்குக் கொடுக்கப்படுமாம். இதற்கு மேல்இன்னும்ஆடம்பரமாகச் செய்யவேண்டுமென்றால்அதற்காக உயர்ந்த கட்டண விகிதங்களும் இருக்கின்றனவாம்.

குமட்டலுக்கு மருந்து

டோரண்டோ, மே 28—

கடல் பிரயாணத்தை புதிதாக மேற்கொள்பவர்களுக்கு ஏற்படும் குமட்டலை குணப்படுத்த கண்டு பிடிக்கப்பட்டுள்ள மருந்து இப்பொழுது 60 சதவிகித பலன் அளிப்பதாக இருக்கிறது என்றும் சீக்கிரமே 95 சதவிகித பலன் அளிப்பதாக இது செய்யப்படும் என்றும் மாசசெஸ்டர் சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் ஜி. ஆர். வெண்ட் என்பவர் கூறுகிறார்.

—ருனோப்

பல்லைக் கடன் கேட்டாளும்!

தன் கணவன் லிகார் பிடிப்பதற்காக தன் மனைவியின் பொய்ப் பல் வரிசையை அடிக்கடி கடன் கேட்கிறானும். இதை காரணமாகக் காட்டி ரஷிய ஜெர்மன் பகுதியிலுள்ள அப்புருஷனின் மனைவி விவாகரத்து கோரியிருக்கிறாள்.

—ருனோப்

பயிர்தொழில் பயிற்சி பள்ளிகள்

அம்மான், மே 28—

ஜார்டனில் விவசாயத்தை பெருக்க பயிர்த் தொழிலில் பயிற்சி அளிக்க பள்ளிகளை நாட்டில் பல இடங்களை ஏற்படுத்த விவசாய மந்திரி இலாகா திட்டம் போட்டிருக்கிறது.

இப்பள்ளிகளில் சேருபவர்கள் 7-ஆண்டு கால பயிற்சி பெறுவர் இதைத்தவிர ஆராய்ச்சி பண்ணைகள் பல ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

காங்கிரஸ் கும்பமேளா!

மீண்டும் ஒத்திவைப்பு!

புதுடில்லி, மே 27—

ஜூலை கடைசிவாரத்தில் கூடவிருந்த அகில இந்திய காங்கிரஸ் மாகாடு மீண்டும் ஒரு முறை ஒத்திவைக்கப் படடுவிட்டது. அநேகமாக ஆகஸ்டு மாதத்தில் இது நடைபெறலாம் என்று சொல்லப் படுகிறது.

பெங்களூரில் நடைபெறுவதாக இருந்து, நாஸிக்கிறகு திடீரென்று மாற்றப்பட்டதால் மகாசபை செஷனுக்காக ஏற்பாடுகள் பூர்த்தியாகாததே இந்த ஒத்திவைப்புக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

இந்த வருஷ செஷன் காரியத்திலேயே கண் செலுத்துப செஷனாக இருக்கும் என்று கூறுகிறார்கள் காங்கிரஸ் கனவான்கள். என்ன காரியமோ தெரியவில்லை! ஏழைகள் வாழ்க்கையை எப்படி வாட்டி வதைப்பது, மக்கள் உரிமைகளை இன்னும் எப்படிப் பறிப்பது, எந்தெந்த விதத்தில் அடக்கு முறைகளை ஏச்சினால், எந்தெந்த எதிர்கட்சிகளை ஒழிக்க முடியும், என்பன போன்ற காரியங்களாகத்தான் இருக்கும் அக்கனவான்கள் பேச இருக்கும் காரியங்கள்! வேறு என்ன காரியமாக இருக்க முடியும்! வேறு என்ன காரியத்தைச் செய்திருக்கிறார்கள் இந்தக் கண்ணியமே உருவான காங்கிரஸ் காரர்கள், இந்த மூன்றாண்டு கால ஆட்சியில்!

நீதிமன்றத்திற்கு வாதி வரவில்லை!

வாதிவீட்டிற்குநீதிமன்றம்வந்தது

லண்டன், மே 28—

ஸ்வான்ஸி விவாகரத்துக் கோர்ட்டுக்கு வரமுடியாத நிலையில் ஒரு பெண் இருப்பதாக டாக்டர்கள் சர்ட்டிபிகேட் கொடுத்ததின் பேரில் அந்த பெண்மீது அவள் கணவன் கோரிய விவாகரத்து மனுவை விசாரிக்க நீதிபதி, பாரிஸ்டர்கள் அதிகாரிகள் சகிதம் அந்த பெண் வீட்டிலேயே கோர்ட்டைக் கூட்டிவிட்டார்.

இனி நடப்பவை

முன்னணிக் கழகம், திருவல்லிக்கேணி:—(கெல்லட் உயர்நிலைப் பள்ளி அருகில்) இக்கழகத்தின் ஏழாம் கூட்டம் கோர்சியர் மயிலை சிவ. மூத்து அவர்கள் தலைமையில் 30—5—50 செவ்வாய் மாலை 5-30 மணிக்கு நடைபெறும். அப்போது தோழர்கள் ஆறுமுகம், இளங்கோவன், மதி ஆகியோரும் மற்றும் பலரும்பேசுவர். பொருள்: "நம் நாட்டு வீரர்கள்"

* * *

உமையாள்:—2—6—50 வெள்ளிக்கிழமை மாலை 6-மணியளவில் குட்டை மைதானத்தில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும். அதுபோது டி. கே. சீனுவாசன் இராமாமிர்தத்தம்மையார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அண்ணாமலையாருக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆச்சாரியார்! முன்னரே ஆச்சாரியார் குழுவினர் இந் நாட்டில் கம்பதாசர்களை உற்பத்தி செய்துள்ளது போதாதென்று இத்தகைய புது தாசர்களையும் இப்பொழுது உற்பத்திசெய்ய முயலுகிறார் போலும்!

இன்று துளசிப் பரிசளிக்கும் முறைக்கு தோழர் ஆச்சாரியார் ஆரம்பவிழா நடத்திக் காட்டிவிட்டார் இனி ஆச்சாரியாரைப் பின்பற்றி சைவ மெய்யன்பர்கள் திருநீற்றுப்பரிசு வழங்க முன் வந்தாலும் அது கண்டு நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. நல்ல வேளையாக ஆச்சாரியார் துளசியோடு விட்டாரே, கொஞ்சம் திருமண், நாமக் கட்டி இவற்றையும் கலந்து அனுப்பி வைக்காமல்!

அண்ணாமலையார்களுக்கு துளசிமட்டுமின்றி, கொஞ்சம் நாமக் கட்டியும் அனுப்பியிருந்தாலும் பொருத்தமாகத் தானிருந்திருக்கும். ஏனெனில் நடப்பது ராமராஜ்யம் அல்லவா! அதிலே அண்ணாமலைகள் ஆழ்வார்களாகத்தானே கருதப்படுவர்! ஆழ்வார்களுக்கு நாமம்தானே நற்பரிசாக முடியும்!

இந்த லட்சணத்திலே அண்ணாமலையாரின் மணி விழாக் கூட்டத்துக்குதலைமைதாங்கிப் பேசிய காமராஜர் காங்கிரசின் மகத்துவத்தைப் பற்றி பேசியதோடு நில்லாமல், காங்கிரசாட்சிக்கு நிகராக வேறெந்த ஆட்சியும் இருக்கமுடியாதென்று வெட்கமின்றி வீரம் பேசுகிறார். அண்ணாமலையார்கள் துளசிக்கு தாசர்களாக்கப் படும் அதிசயமும் அலங்கோலமும் அவரது கண்களுக்குத் தெரியவில்லை. இன்று அண்ணாமலையாருக்குத் துளசி பரிசு கிடைத்திருக்கிறது! இனி காமராசர்களுக்கு என்ன பரிசுகள் கிடைக்குமோ!

ரகுபதி ராகவ ராஜாராம்! ஜெய் ஹிந்த்!

நாளை

கோவை, முத்தமிழ் வளர்ச்சி மாநாடு பற்றிய செய்திகள் நாளை வரும்.

ஆடுகளுக்கு வரிவிலக்கு

டமாஸ்கஸ், மே 28—

ஆடுகள் இறக்குமதியை அதிகரிக்கவும் உள் நாட்டு விலையை குறைக்கவும் ஆடுகளுக்கு போடப்படும் வரியை எடுத்துவிடலாமா என்பது பற்றி ஸிரியா சர்க்கார் ஆலோசித்து வருகிறது.

ஏஜண்டு தேவை

திருச்சியில் நமது "மாலை மணி" யை விற்பனை செய்ய முன் பணம் கட்டக்கூடிய பொறுப்புள்ள ஏஜண்டு தேவை!

நிர்வாகி,
'மாலைமணி'

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

		ரூ. அ. பை.
முன்வரவு		2802—9—6
ரா. மலையரசன், பாளையம்பட்டி		1—0—0
வி. தி. பொன்னுசாமி, ளேம்பாக்கம்		2—0—0
கூ. ரா, வேணுகோபால்	,,	2—0—0
மு. வெங்கடேசன்	,,	1—8—0
கோ. நா முனுசாமி,	,,	1 0—0
டி. செல்லப்பன்,	,,	1—0—0
சுந்திரமூர்த்தி,	,,	1—0—0
கே. அ. சொக்கலிங்கம்	,,	1—0—0
அனீப்,	,,	1—0—6
கந்தசாமி,	,,	0—8—0
வே. முத்துசாமி,	,,	0—8—0
கே. வெ. குபேந்திரன்	,,	0—8—0
ப. க. திருநீலகண்டன்,	,,	0—8—0
சா. ந. சீனிவாசன்,	,,	0—8—0
கே. சி. கண்ணப்பன்,	,,	0—8—0
கே. வி. இராமகிருட்டிணன்	,,	0—8—0
மீ. மன்னார்முகம்மது,	,,	0—8—0
வி. இராகவன்,	,,	0—8—0
சா. கி. சீனிவாசன்,	,,	0—8—0
வி. தி. ஏழுமலை,	,,	0—8—0
கே. ர. வீரராகவன்,	,,	0—8—0
பொ. ர. கிருஷ்ணமூர்த்தி,	,,	0—4—0
வ கோ. கிருட்டிணசாமி,	,,	0-8—0
சா. கி. வேதகிரி, மாதவன், சு மன்னார்,	,,	0—6—0
கே. ஏ. ஷண்முகம்	,,	0—4—0
கே. எஸ். ஷண்முகசுந்திரன்,	,,	1—0—0
மோட்டார் தொழிலாளி பள்ளி மாணவர்கள்,	,,	1—1—6
தி. மு க. கிளை, செருடந்தாளி		10—0—0
கே. எஸ். இராஜமான், மதுரை		5—0-0
ஏ. எஸ் இராமசாமி	,,	4 0—0
சி. பாக்யம்	,,	1—0—0
அ. குருசாமி,	,,	1—0—0
பே. இராமசாமி,	,,	1—0—0
ப. சண்முககுட்டி.	,,	1—0—0
ஏ. சௌந்தரபாண்டியன்,	,,	1—0—0
பெ இராமசாமி,	,,	1—0—0
எம். வேலுசாமி,	,,	2—0—0
தி. மு. க. கிளை மேலகறக்கண்டார் கோட்டை		10—0-0
கல்லூரி மாணவர்கள், அருப்புக்கோட்டை		5—0—0
பி. பக்கிரிசாமி	,,	2—0—0
வரிசைமொகைதீன்,	,,	1—0-0
ஷெரீப்,	,,	1—0-0
கே. எம். அப்துல்காசிம் பாப்பாநாடு		1-0—0
பி. துரைராஜ், எம் சிவசாமி	,,	0—8 0
தி. மு க. கிளை, திருவலம்புரம்		10—0—0
என் எஸ். கே. சுப்பையா	,,	5-0—0
ஏ. பொன்னுசாமி	,,	2—0—0
எம். என். இரத்தினம்	,,	2—0—0
எம். பெரியசாமி,	,,	2-0—0
எம். வேலுசாமி.	,,	2—0—0
கே. மாரிமுத்து.	,,	2—0-0
பொ. தருபர்,	,,	3—0—0
சு, அ. மு. சுப்ரமணியம்	,,	1—0—0
ஆ. சி ஆறுமுகம்	,,	1—0-0
எஸ். சுப்ரமணியம்,	,,	1—0—0
பி. சக்கரை,	,,	1—0—0
செ மு. கருப்பண்ணன்,	,,	1—0—0
செ. சீனியப்பன்,	,,	1—0—0
எஸ். எஸ் குருசாமி,	,,	1—0—0
கே. பச்சையப்பன்,	,,	1—0-0
கே. சந்தரப்பன்,	,,	1—0—0
எஸ். சுப்பையா,	,,	0—8—0
கு. ப. சுப்பையா,	,,	1—0—0
		2909—1—6

அணுக்குண்டுகளைக் கொண்டுபோக!

புதியவிமானங்கள்!

வாஷிங்டன், மே 28—

A. J.-2 என்கிற புதாக வெடிவிமானங்கள் அணுகுண்டுகளை எதிர் செல்வதற்காகவே தயாரிக்கப் பட்டதா என்ற கேள்விக்கு யு. எஸ். கடற்படை இலாகா எதுவும் கூறமறுக்கிறது.

ஆனால் இத்தகைய விமானங்கள் அணுக்குண்டுகளை எத்திச்செல்வதற்காகவே தயாரிக்கப்பட்டதாக நினைக்க இடமிருக்கிறது. இந்த விமானங்களின் இறக்கைகளை மடக்க முடியுமாம்.

இந்த விமானங்களை ஓட்ட விசேஷ விமானிகள் பொறுக்கி எடுக்கப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

—ருனோப்

விளையாட்டு வினையாயிற்று!

குடிமாலா, மே 28—

ஒரு கால்பந்து விளையாட்டுப் போட்டியில் ஏற்பட்ட அடிதடி தகராறு மத்திய அமெரிக்க குடியரசுகளான குடிமாலா ஸால்வடார் இவைகளின் ராஜிய உறவு முறிவு வரையில் கொண்டுவேர்ந்துவிட்டுவிட்டது.

இருநாடுகளின் கோஷ்டிக்கு மிடையே கால்பந்து விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. இதில் ஏற்பட்ட கலகத்தை போலீசார் தடுத்தனர். இதைத் தொடர்ந்து ஸால்வடார் தலைநகரில் ஏற்பட்ட குடிமாலா எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இருவர் மாண்டனர். இப்பொழுது இரண்டு நாடுகளுக்குமிடையே ராஜிய உறவு முறியும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அப்பாடா! அரிசி வந்தது!

தமிழகத்துக்கல்ல; திருவாங்கூர்—கொச்சிக்கு

பர்மாவிலிருந்து 8,966 டன் புழுங்கல் அரிசியை ஏற்றிக்கொண்டு "கம்பா" என்னும் கப்பல் 1950 மே 21-ந் தேதி யன்று கொச்சி துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது. இந்த அரிசி முழுவதும் திருவாங்கூர் கொச்சி சமஸ்தானத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

காதலிக்காகக் காத்திருந்த மாவீரன்!

போலீஸாரால் கைது செய்யப்பட்டான்

லத்தார் மஜார் பிரதேசத்தில் தான் காதலித்த பெண்மணியின் வீட்டு முன்பு இரவு பூராவாக காத்துக்கிடந்த ஒரு வாலிபனை போலீஸார் கைது செய்திருக்கின்றனர்.

தன் காதலியின் அன்பையும் அனுதாபத்தையும்பெற, தான் அவள் வீட்டுவாசலில் தவமிடப்போனதாகவும், வீண் கலாட்டா எதுவும் செய்யும் எண்ணமில்லை என்றும் அவ்வாலிபன் கூறினாலும், இன்னும் என்ன கலாட்டா செய்ய இருக்கிறது, ஏற்கனவே ஏக கலாட்டா செய்தாகிவிட்டதே என்று கூறி அவனை போலீஸார் கைது செய்து அழைத்துச் சென்றனராம்.

இரட்டைக்குழந்தைகள்

நியூயார்க், மே 28—

ப்ரூக்ஸின் ஆஸ்பத்திரியில் ஒட்டிக்கொண்டு இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கின்றன. இவைகளுக்கு இரண்டு கால்கள்தான் இருந்தன.

ஜார்டன் விஸ்தரிப்பு

பாக்தாத், மே 28—

ஜார்டன் விஸ்தரிப்பு குறித்து இராக் மந்திரி சபை இன்னும் எவ்வித முடிவுக்கும் வந்ததாகத் தெரியவில்லை. விஷயம் இன்னும் ஆலோசிக்கப்பட்டு வருகிறதாம்.

சர்க்கார் சிப்பந்திகளுக்கு சம்பள உயர்வு

இங்கல்ல; சூடானில்!

கார்ட்டூம், மே 28—

சர்க்கார் சிப்பந்திகள், அதிகாரிகள் எல்லாருடைய சம்பளத்தையும் உயர்த்துவதென்ற சூடான் சர்க்காரின் யோசனையை சூடான் சட்டசபை அங்கீகரித்துவிட்டது.

இந்த உயர்வால் வருஷத்தில் ரூ. 1?3,00,000 அதிகம் செலவாகுமாம்.

காஷ்மீருக்கு புத்த பிரானின் சின்னங்கள்

மகான் புத்தர், அவருடைய இரு சிஷ்யர்கள் ஸாரிபுத்தா, மொகலானு இவர்களுடைய சின்னங்கள் கல்கத்தாவிலிருந்து புதுடில்லிக்குக் கொண்டுவரப்பட்டு இன்று காஷ்மீருக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது.

லடாக்கிற்கு பண்டித நேரு விஜயம் செய்தபொழுது இந்த சின்னங்களை அனுப்பிவைப்பதாக உறுதிமொழி கொடுத்திருந்தாராம். அதன்படியே இவை அனுப்பப்படுகின்றன.

ராஜகுமாரி அமிருதகௌரி

அடுத்த மாதம் இந்தியா திரும்புகிறார்

இந்தியாவின் சுகாதார மந்திரி தோழியர் ராஜகுமாரி அமிருதகௌரி அடுத்த மாத மத்தியில் இந்தியா திரும்புவார் என்று தெரிய வருகிறது.

இவ்வாரம் அவர் ஜினிவாவை விட்டு லண்டனுக்குப் புறப்படுகிறார். பிரிட்டனிலுள்ள இந்திய வைத்திய மாணவர்களை அவர் சந்தித்துப் பேசுவார்.

காதலால் ஏற்பட்ட அவதி

விக்கல் அடைந்தார்! வேதனைப்பட்டார்!

லண்டன், மே 28—

காதலால் ஏற்பட்ட கவலைக் காரணமாக ஒருவருக்கு விக்கல் எடுக்க ஆரம்பித்துவிட்டதென்று பிரிட்டிஷ் மெடிகல் ஜர்னலில் டாக்டர் நெவில் மூர்ரே என்பவர் தெரிவித்திருக்கிறார்.

நோயாளிக்கு விக்கல் ஏற்பட்டு ஓயாமல் இருந்தவரவே இதற்குக் காரணத்தைக் கண்டுபிடிக்க பல பரீட்சைகள் செய்யப்பட்டதாம். ஆனால் விஷயம் என்ன என்பது தெரியவில்லையாம்.

பின்னர்தான் தன் மனைவிக்குத் தெரியாமல் ஒரு பெண்ணை அவர் காதலிப்பதும் அந்தக் கவலையினால் இது ஏற்பட்டிருக்கவேண்டும் என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. அவருடைய கவலைகள் நீங்க வழி செய்யப்படும் என்ற உறுதிமொழி அளித்ததின் பேரில் அவருடைய விக்கல் நின்றுவிட்டது என்று அந்த டாக்டர் கூறுகிறார்.

மக்களுக்கு உணவில்

மாணிக்க லோலாக்குக் கிடைக்கிறது நாய்க்கு!

லண்டன், மே 28—

ஒரு ஹோட்டல் சொந்தக்காரர் மாணிக்க லோலாக்கு அணிந்த தன் நாய் காணாமல் போய்விட்டதாகவும் அதைக் கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு ரூ. 660 பரிசு அளிப்பதாக அறிவித்திருக்கிறார்.

தன் நாய்க்கு லோலாக்கு அணிவிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது எப்படி என்பதை அவர் விளக்குகையில் தன் மனைவிக்காக மாணிக்க லோலாக்குகளை தான் வாங்கினதாகவும் அவள் அதை அணிய மறுத்துவிடவே அதை தன் நாய்க்கு மாட்டினதாகவும் அவர் கூறுகிறார்.

தண்டையார்பேட்டையில் டெலிபோன் வசதி

தண்டையார்பேட்டை போலீஸ் ஸ்டேஷனில் பொதுஜன உபயோகத்துக்காக மேலும் ஒரு டெலிபோன் நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நிலையம் மே 18-ந் தேதி முதல் வேலை செய்து வருகிறது.

இது ப்ராஸ்பெக்டஸ் அல்ல, ஒரு அறிக்கை.

மாலி பிக்சர்ஸ் லிமிடெட்,

44, அலிமஹால் தெரு, திருச்சிராப்பள்ளி.

(1913-ம் வருஷ இந்திய கம்பெனிகள் சட்டப்பிரகாரம் இணைக்கப்பட்டது)

அங்கீகரிக்கப்பட்ட வெளியிடப்பட்ட மூலதனம் ரூ. 5,00,000—0—0

கீழ்க்கண்டவாறு வினியோகிக்கப்படும் :—

ஒரு ஷேர் ரூ 10 வீதம் 5% பிரெபரன்ஸ் ஷேர்கள் 10,000 ரூ. 1,00,000—0—0

ஒரு ஷேர் ரூ. 100 வீதம் ஆர்டினரி ஷேர்கள் 4,000 ரூ. 4,00,000—0—0

கீழ்க்கண்டவாறு வினியோகிக்கப்படும் :—

பிரெபரன்ஸ் ஷேர்கள் ஒரு ஷேர் ரூ 10 வீதம் விண்ணப்பத்தின் பேரில் கொடுக்கப்படும்.

ஆர்டினரி ஷேர்கள் ஒரு ஷேர் ரூ 100 வீதம் விண்ணப்பத்தின் பேரில் கொடுக்கப்படும்.

டைரெக்டர்கள் :—

1. **ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன்**
   இலக்கியகர்த்தா, நடிகர், படதயாரிப்பாளர், 'எனெஸ்கே பிலிம்ஸ்' முதலாளி, விலாசம் 6, வெங்கட்ராமய்யர் தெரு, தியாகராயநகர், சென்னை—17. (போர்டு சேர்மன்)
2. **ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர்**
   படதயாரிப்பாளர், நடிகர், புரொப்ரைட்டர், 'நரேந்திர பிக்சர்ஸ்' டைரெக்டர், தியாகராஜ பிலிம்ஸ் லிமிடெட், விலாசம் 5, ரயில் ரோடு, கண்டோன்மெண்டு; திருச்சி.
3. **ஸ்ரீ வி. நடராஜ சர்மா**
   வியாபாரி, 'நடன விலாஸ்' 1, போர்ட்ஸ் ரோடு, கண்டோன்மெண்டு, திருச்சி.
4. **ஜனுப் எஸ். எம். முகமது மொகைதீன்**
   நில சுவான்தார், "கோய்யா ஹவுஸ்" முத்துப்பேட்டை, தஞ்சை ஜில்லா.
5. **ஸ்ரீ டி. ஆர். மகாலிங்கம்**
   நடிகர், பட தயாரிப்பாளர், புரொப்ரைட்டர், 'ஸ்ரீ சுகுமார் புரொடக்ஷன்' விலாசம் 129 'சுகுமார் பவனம்' ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை.
6. **ஸ்ரீ கே. சாரங்கபாணி**
   பிலிம் ஆர்டிஸ்ட், விலாசம் 14, அரிசிக்கார தெரு, மயிலாப்பூர் சென்னை.
7. **ஜனுப் எஸ். என். ஷம்ஸுதீன்**
   புரொப்ரைட்டர் "வெலிங்டன், ராக்சி" சினிமா கொட்டகைகள், திருச்சிராப்பள்ளி.
8. **ஜனுப் எஸ். ஏ. அபுசாலிஹு**
   புரொப்ரைட்டர், ஸ்டார் டாக்கீஸ், திருச்சி.
9. **ஜனுப் எஸ். எம். முகமது அலி**
   புரொப்ரைட்டர், மாலி பிக்சர்ஸ், விலாசம் 9, அலிமஹால் தெரு, திருச்சி.

பாங்கர்கள் :— தி இந்தியன் பாங்கு லிமிடெட், திருச்சிராப்பள்ளி.

ஆடிட்டர்கள் :— ஜி. பாலசுப்ரமணியன் & கம்பெனி, சார்டர்டு அக்கவுண்டண்ட்கள், கல்யாணபுரம், திருச்சிராப்பள்ளி.

சட்ட ஆலோசகர் :— ஸ்ரீ ஜி. ரெங்கசாமி அய்யங்கார் எம்.ஏ., எம்.எல்., அட்வகேட் சிங்காரத்தோப்பு, திருச்சிராப்பள்ளி.

ரிஜிஸ்டர்டு ஆபீஸ் :— 44, அலிமஹால் தெரு, திருச்சிராப்பள்ளி.

நோக்கங்கள்

திருச்சி மாலி பிக்சர்ஸ் என்ற பெயரால் ஜனுப் எஸ். எம். முகமது அலி அவர்கள் நடத்திவரும் படங்களின் வினியோக கம்பெனியை பெற்று நடத்துவது, இக்கம்பெனியின் மெமோரண்டம் ஷரத்துகளில் கண்ட சகல வகுப்பங்களையும் நடத்துவது, இதர கம்பெனிகளில் தயாராகும் சிறந்த திரைப்படங்களின் வினியோக உரிமை பெற்று நடத்துவது, தமிழ் பேசும் படங்களை உயர்தர முறையில் தயாரிப்பது, சினிமா கொட்டகைகள் கட்டி அல்லது கிரையம், லீஸ் மூலம் பெற்று நடத்துவது, ஆகிய நோக்கங்களுடன் இக்கம்பெனி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

அதிசீக்கிரத்தில் வெளியிடவிருக்கும் சிட்டாடலின் 'இதய கீதம்' என்ற உயர்தர தமிழ் பேசும் பட வினியோக உரிமையை இக்கம்பெனி திருச்சி, தஞ்சை, காரைக்கால் உள்பட பிரதேசங்களுக்கு ஏற்கனவே பெற்றிருக்கிறது.

லாபப் பங்கீடு (டிவிடன்டு) கொடுப்பதின் கட்டுப்பாட்டை இந்திய யூனியன் சர்க்கார் நீக்கிவிட்டார் என்பது பங்குதாரர்களுக்கு லாபகரமே.

இவைகள் கம்பெனியின் முன்னேற்றத்திற்கு மிகவும் ஆதரவு அளித்து பங்குதாரர்களுக்கும் அதிக லாபத்தையும் அளிக்கும்.

N. B.—விண்ணப்ப பாரங்களையும் மற்ற விபரங்களையும் திருச்சிராப்பள்ளி 44, அலிமஹால் தெருவு, கம்பெனி ஆபீஸில் மானேஜிங் டைரக்டர் ஜனுப எஸ். எம். மஹமது அலி அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மலைப்பாம்பைக் கடித்த 10-வயது சிறுவன்

அதனால்தான் உயிர் தப்பமுடிந்தது

கேப்டவுன், மே 28—

ஒரு பெரிய மலைப்பாம்பு 10 வயது சிறுவனைச் சுற்றிக்கொண்டு அவனை விழுங்கத் தயாராக இருந்ததாம். அச்சமயத்தில் அப்பையன் பாம்பின் வயிற்றை நன்றாக அழுத்திக் கடித்துவிட்டான். இதனால்வலி பொறுக்காத பாம்பு அப்பையனை விட்டுவிட்டு அவனுடைய நாய் மேல் பாய்ந்து அதைவிழுங்கிவிட்டது.

இரத்தக்கோதிப்புள்ளவர்களுக்கு சகிப்புத்தன்மை அதிகமாம்!

அமெரிக்க நிபுணர்கள் கருத்து

நியூயார்க், மே 28—

இரத்தக் கொதிப்புள்ளவர்கள் சகஜமாகவே குஷிப்பேர்வழிகள் என்பதுடன் சகிப்புத்தன்மை கொண்டவர்கள் என்பது அமெரிக்க நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

அத்துடன்மட்டுமின்றி தன்னை நம்பியிருப்பவர்களுக்காக அவர்கள் எதையும் செய்யத் தயாராக இருப்பர். ஆனால், பொதுவாக இவர்கள் அமைதியற்றவர்களாக இருப்பர் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

பிரார்த்தனைக்கு வராவிடில் அபராதமாம்!

மாக்ராத்-2 ல் ஜரீத் மே 28—

கிர்வால் என்கிற கிராமத்தில் பிரார்த்தனை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

மசூதியில் பிரார்த்தனைக்கு யார் வரவில்லையோ அவர்கள் ஒவ்வொருவரும் ரூ. 2 அபராதம் செலுத்த வேண்டும் என்று ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthu mari Chetty St, Madras-1.